| | வலயக்கல்விஅலுவலகம் - யாழ்ப்பாணம் | | |
|---|---|---|---|
| | இரண்டாம் தவணைப்பரீட்சை– 2018 | | |
| | தரம் - 7 | வரலாறு | நேரம் :- 2.00 மணித்தியாலம் |

சுட்டெண் :- ...............................

## பகுதி– I

❖ **பொருத்தமானவிடையின் கீழ் கோடிடுக?**

01. சேனை என்பதற்குக் கல்வெட்டுகளில் வழங்கப்பட்ட பெயர்
    1) சேன் 2) பிட்டபிம் 3) காடு 4) நவதெளிசேனை

02. வபிஹமிக என்ற சொல் குறிப்பது
    1) குளக்கிராமம் 2)கிராமம் 3)நகரம் 4)கைவிடப்பட்ட குளம்

03. மூன்று போக வேளாண்மை பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு
    1) கல்பொத்தக் கல்வெட்டு 2) தெவனகல கல்வெட்டு
    3) தோணிகல கல்வெட்டு 4) ஹேப்பிட்டிகம கல்வெட்டு

04. இலங்கைக்கு பௌத்தசமயம் கொண்டு வரப்பட்ட போது ஆட்சி செய்த மன்னன்
    1) பண்டுகாபயன் 2) மூத்தசிவன் 3) துட்டகைமுனு 4) தேவநம்பியதீசன்

05. தாயாருக்குப் பணிவிடை செய்ததாக மகாவம்சம் குறிப்பிடும் மன்னன்
    1) 8ம் அக்கபோதி 2) துட்டகைமுனு 3) 4ம் உதயன் 4) பண்டுகாபயன்

06. வசப மன்னனுடைய வம்சம்
    1) மோரிய வம்சம் 2) இலம்பகர்ண வம்சம் 3) கலிங்கவம்சம் 4) பாண்டியவம்சம்

07. தஞ்சாவூரை தலை நகராகக் கொண்டு ஆட்சி செய்த தென்னிந்திய அரசு
    1) சேர அரசு 2) சோழஅரசு 3) பாண்டியஅரசு 4) பல்லவஅரசு

08. பொலன்னறுவையை சோழர்களிடம் இருந்து மீட்டெடுத்த மன்னன்
    1) 1ம் விஜயபாகு 2) மகாபராக்கிரமபாகு
    3) 2ஆம் விஜயபாகு 4) நிஸங்க மல்லன்

09. ராமஞ்ஞ தேசம் என அழைக்கப்பட்ட நாடு
    1) சீனா 2) பர்மா 3) தாய்லாந்து 4) கம்போடியா

10. துலாபாராக் கொடையாளி என சிறப்பிக்கப்பட்ட மன்னன்
    1) நிஸங்கமல்லன் 2) 1ஆம் பராக்கிரமபாகு
    3) 1ஆம் விஜயபாகு 4) 2ஆம் விஜயபாகு



kalvi.lk

11. 1ம் விஜயபாகுவிற்கு உதவிய அதிகாரி

1) தேவபதிராஜ 2) நகரகீர்த்தி
3) சித்தாரும்பி புத்தநாயக்கா 4) ஜனத் விஜய

12. புரதான சிந்துவெளி நாகரிகம் நிலவிய மொஹஞ்சதாரோ நகர் தற்போது காணப்படும் நாடு

1) இந்தியா 2) சீனா 3) பாகிஸ்தான் 4) ஈராக்

13. இரட்டைத் தடாகம் (குட்டம், பொய்கை) அமைந்துள்ள மாவட்டம்

1) அனுராதபுரம் 2) பொலன்னறுவை 3) மாத்தளை 4) காலி

14. தென் கடற்கரையில் அழகிய சுற்றாடலில் அமைந்துள்ள உலக மரபுரிமைகளில் ஒன்று

1) தலதாமாளிகை 2) சிகிரியா
3) காலிக்கோட்டை 4) தம்புள்ளை குகை விகாரை

15. காசியப்ப மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட கலைப்படைப்பு

1) தம்புள்ளை 2) தலதாமாளிகை 3) சிகிரியா 4) கதிர்காமம்

16. இலங்கையில் முகமூடிக் கைத்தொழிலுக்குப் புகழ் பெற்ற இடம்

1) பதுளை 2) கொத்மலை
3) யாழ்ப்பாணம் 4) அம்பலாங்கொடை

17. கல்விகாரைப் புத்தர் சிலையை அமைத்த மன்னன்

1) 1 ஆம் பராக்கிரமபாகு 2) 1 ஆம் விஜயபாகு
3) 2 ஆம் பராக்கிரமபாகு 4) 2 ஆம் விஜயபாகு

18. பட்டணகம் என்பது

1) வணிககிராமம் 2) குளக்கிராமம் 3) துறைமுகநகரம் 4) துறைமுகம்

19. புரதான காலத்தில் மட்பாண்டங்களை செய்வோரை குறிக்கப் பயன்படுத்திய சொல்

1) பெஹெகார 2) கும்பகார 3) மணிகர 4) லோகுரு

20. அநுராதபுர யுகத்தின் பின்னரைக் காலத்தில் கிராமத்தை நிர்வகித்தோருக்குவழங்கப்பட்டபெயர்

1) கம்லத்தன் 2) பருமக 3) அடிக 4) பருமகலு

(20X2=40 புள்ளிகள்)




kalvi.lk

## பகுதிII

❖ முதலாம் வினாஉட்பட்டஐந்துவினாக்களுக்குவிடையளிக்குக.

01. அ.தரப்பட்ட இலங்கைப் புற உருவப்படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக.
அநுராதபுரம்,மகாவலிகங்கை,யாழ்ப்பாணம்,மன்னார்,திருகோணமலை,பொலன்னறுவை



(6 புள்ளிகள்)



kalvi.lk

ஆ

i) இரண்டாம் தவணையில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகை யாது? (1 புள்ளி)

ii) இக்கணிப்பீட்டைமேற்கொண்டபாடஅலகுளது? (1 புள்ளி)

iii) இக்கணிப்பீட்டுக்குநீர் பயன்படுத்தியதரஉள்ளீட்டுப் பொருள்கள் இரண்டுதருக? (2 புள்ளிகள்)

iv) இக் கணிப்பீட்டின் மூலம் நீர்பெற்றுக் கொண்டநன்மைகள் இரண்டுதருக? (2 புள்ளிகள்)

02.

i) புரதானகாலவிவசாயமுறையின் இருவகைகளையும் தருக? (2 புள்ளிகள்)

ii) சேனைப் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டஉபகரணங்கள் மூன்றுதருக? (3 புள்ளிகள்)

iii) பண்டையகாலத்தில் இலங்கை தொடர்பு கொண்ட வெளிநாடுகள் மூன்றுதருக? (3 புள்ளிகள்)

iv) ஹேப்பிட்டிகம தூண் கல்வெட்டில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

03.

i) பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆட்சி செய்த மன்னர்கள் மூவரின் பெயர்களைத் தருக? (3 புள்ளிகள்)

ii) மகாவிஜயபாகுமன்னன் பற்றிஅறிய உதவும் மூலகங்கள் மூன்றுதருக? (4 புள்ளிகள்)

iii) 1 ஆம் விஜயபாகுமன்னனின் சமயப்பணிகள் இரண்டுதருக? (2 புள்ளிகள்)

iv) 1 ஆம் விஜயபாகுமன்னன் தொடர்புகொண்டவெளிநாடுகள் இரண்டுதருக? (2 புள்ளிகள்)

04.

i) மகாபராக்கிரமபாகுதொடர்புகொண்டவெளிநாடுகள் இரண்டுதருக?(4 புள்ளிகள்)

ii) மகாபராக்கிரமபாகுவின் பொருளாதாரநடவடிக்கைகள் மூன்றுதருக?(3 புள்ளிகள்)

iii) மகாபராக்கிரமபாகுவின் பௌத்தசாசனப் பணிகள் மூன்றுதருக? (3 புள்ளிகள்)

iv) மகாபராக்கிரமபாகுகட்டியகுளங்கள் இரண்டுகுறிப்பிடுக. (2 புள்ளிகள்)

05.

i) கலாசாரமரபுரிமைகளிற்கு மூன்றுஉதாரணம் தருக? (3 புள்ளிகள்)

ii) கலாசாரமரபுரிமைகளின் இருவகைகளும் எவை? (2 புள்ளிகள்)

iii) உலககலாசாரமரபுரிமைகளில் இலங்கையில் உள்ளமரபுரிமைகள் மூன்றுதருக? (3 குள்ளிகள்)

iv) யுனெஸ்கோ குறிப்பிடும் தொட்டுணர முடியாத உரிமைகளின் தனித்துவங்கள் இரண்டுதருக? (4 புள்ளிகள்)

06.

i) இராசரட்டைக் காலத்தில் நடைபெற்றவிழாக்கள் மூன்றுதருக? (3 புள்ளிகள்)

ii) இலங்கையில் பின்பற்றப்படும்மதங்கள் நான்குதருக? (4 புள்ளிகள்)

iii) எமதுபண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவங்கள் இரண்டுதருக? (2 புள்ளிகள்)

iv) எமதுவாழ்க்கையோடுதொடர்புபட்டசடங்குகள் மூன்றதருக(3 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**TAMIL MEDIUM**

850/= Monthly

**ENGLISH MEDIUM**

1000/= Monthly

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page